


07.08.2024

தலைப்புச் செய்திகள்

1. அரசுமுறை பயணமாக நியூசிலாந்து சென்றுள்ள குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனை இன்று சந்தித்து பேசுகிறார்.

2. உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா இன்னும் இரண்டு ஆண்டுகளில் உருவெடுக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 203 ஜிகா வாட்டை எட்டியுள்ளது என்று மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

4. பாரீஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்த போட்டியிலிருந்து வினேஷ் ஃபோகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான 3-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி கொழும்புவில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தமது அரசுமுறை பயணத்தின் ஒருபகுதியாக நியூசிலாந்து நாட்டின் ஆக்லாந்தில், அந்நாட்டில் கவர்னர் ஜென்ரல் னுயஅை ஊலனெை முசைழ உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

ஆக்லாந்து சென்றுள்ள குடியரசு தலைவர், பிரதமர் ஊசளைவழிநச டுரஓயெ - னையும் சந்தித்து பேசவுள்ளார்.

ஆக்லாந்தில் கல்வி மாநாட்டில் உரையாற்றும் அவர், இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடுகிறார்.

குடியரசு தலைவரின் இப்பயணம், இந்தியா - நியூசிலாந்து நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக ஃபிஜி நாட்டில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு நாடி நகரில் அமைந்துள்ள ஸ்ரீ சிவ சுப்ரமணிய திருக்கோவிலை பார்வையிட்ட பின்னர் குடியரசு தலைவர் ஆக்லாந்து புறப்பட்டார்.

□□□□□□□□

தேசிய கைத்தறி தினம் - ஜக்தீப் தன்கர்

உலகின் 3-வது பெரிய பொருளாதார நாடாக இந்தியா இன்னும் 2 ஆண்டுகளில் உருவெடுக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லி விஞ்ஞான் பவனில் 10-வது தேசிய கைத்தறி தின நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், காலநிலை மாற்றங்களின் அடிப்படையில் புவியின் நலனுக்காக கைத்தறி பயன்பாடு அதிகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, பொருளாதார கோட்பாடு அவசியம் என்று குறிப்பிட்ட அவர், இதன்மூலம் அந்நிய செலாவணி பரிவர்த்தனை பாதுகாக்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

வேலைவாய்ப்பும் தொழில் முனைவோரின் திறனும் இதனால் மேம்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் பொருட்களை ஊக்குவிக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் செயலாக்கத்தால் கைத்தறி பொருட்கள் உலகளவில் சந்தைப்படுத்தப்படுவதாக குறிப்பிட்டார்.

கைத்தறி உற்பத்தியை ஊக்குவிக்க கூட்டுறவுத்துறை இன்றியமையா பங்காற்றுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக இத்துறையில் சிறப்பாக பங்களிப்பை வழங்கிய கைத்தறி நெசவாளர்களுக்கு சந்த் கபீர் மற்றும் தேசிய கைத்தறி விருதுகளையும் அவர் வழங்கினார்.

□□□□□□□□

கைத்தறி - பிரதமர்

தேசிய கைத்தறி தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி நெசவாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

நம்நாட்டின் வளமான பாரம்பரியத்தையும், எழுச்சிமிகு கலாச்சாரத்தையும் முன்னெடுத்துச் செல்லும் கைத்தறி துறையின் செயல்பாடு குறித்து பெருமிதம் கொள்வதாக சமூக தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் சீரிய முயற்சிகளை பாராட்டி உள்ள அவர், உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் இயக்கத்தின் செயலாக்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என்றார்.

□□□□□□□□

கைத்தறி தொடர்ச்சி

இத்தினத்தை ஒட்டி திருச்சியில் சிறப்பு கைத்தறி கண்காட்சியை தொடங்கி வைத்த மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நெசவாளர்களுக்கு மத்திய அரசின் முத்ரா கடன் தொகை, முதியோர் ஓய்வூதியத் தொகை, நெசவாளர் நலவாழ்வு காப்பீட்டு தொகை மற்றும் கைத்தறி உபகரணங்களை வழங்கினார்.

சேலத்தில் இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலக மாணாக்கரின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். பிருந்தாதேவி இன்று தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரத்தில் நெசவாளர் சேவை மையத்தை சார்ந்த 30 பேருக்கு இதுவரை கைத்தறி துறையின் சிறந்த பங்களிப்பிற்கான தேசிய விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இம்மையத்தின் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

பிம்ஸ்டெக்

பிம்ஸ்டெக் நாடுகளின் வர்த்தக தொழில் கூட்டமைப்பு தனியார், பொதுத்துறை நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் முதலீட்டாளர்களை ஒருங்கிணைக்கும் தளமாக திகழ்கிறது என்று வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பவித்ரா மார்ஹரிட்டா தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நடைபெறும் பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்றவாறு மகளிர் தலைமைக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஜி-20 தலைமைத்துவத்தின் கீழ், மகளிர் தலைமையிலான மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

பல்துறை தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு குறித்து இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

□□□□□□□□

பிரல்ஹாத் ஜோஷி

நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 203 ஜிகா வாட்டை எட்டியுள்ளது என்று மத்திய புதுப்பிக்கத் தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

2014-ம் ஆண்டை ஒப்பிடுகையில் இது 39 ஜிகாவாட் அதிகம் என்றும் தெரிவித்தார்.

மக்களவையில் இன்று கேள்விகளுக்கு பதிலளித்த அவர், 115 ஜிகாவாட் புத்தாக்க எரிசக்தி உற்பத்தி பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளதாக குறிப்பிட்டார்.

புத்தாக்க எரிசக்தி உற்பத்தி அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இதனொரு பகுதியாக பசுமை ஹைட்ரஜன் இயக்கமும், காற்றாலை மின் உற்பத்தி திட்டமும் முழுவீச்சில் நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

□□□□□□□□

வினேஷ் ஃபோகத்

பாரீஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்த போட்டியிலிருந்து வினேஷ் ஃபோகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

50 கிலோ எடைபிரிவின் இறுதி போட்டியில் இன்றிரவு அவர் போட்டியிட இருந்த நிலையில் கூடுதல் எடை காரணமாக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது எடையை பராமரிப்பதற்காக இந்திய ஒலிம்பிக் கழகம் மேற்கொண்ட முயற்சிகளையும் மீறி இன்றுகாலை சிறிதளவு கூடுதல் எடையுடன் இருந்ததாக இந்திய ஒலிம்பிக் கழகம் தெரிவித்துள்ளது

பிரதமர் திரு. நரேந்திரமோடி அவருக்கு ஆறுதல் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவின் பெருமை மிகு வீராங்கனை என்றும், அனைவருக்கும் உத்வேகமாக திகழ்பவர் என்றும் பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

□□□□□□□□□

ரிசர்வ் வங்கி

மத்திய அரசின் திருத்தியமைக்கப்பட்ட வட்டி விகிதங்களின் கீழ் விவசாயிகளுக்கு 3 லட்சம் ரூபாய் வரை 7 சதவிகித வட்டியில் குறுகிய கால கடன்களை வங்கிகள் வழங்க ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி உள்ளது.

கடன்களை முறையாக உரிய காலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவிகித வட்டியில் கடன் வழங்கவும் ரிசர்வ் வங்கி கேட்டுக் கொண்டுள்ளது.

□□□□□□□□□

ஜிதின் பிரசாதா

தகவல் தொழில்நுட்ப பலன்களை விரிவுப்படுத்தும வகையில், 2-ம், 3-ம் பிரிவு நகரங்களிலும், தகவல் தொழில்நுட்ப தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று மத்திய மின்னனு தகவல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், 65 மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைக்கப்பட்டதில் 57 தொழிற்சாலைகள் இத்தகைய நகரங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

கிராமப்புற பகுதிகளின் இணையதள இணைப்பு அதிகரிக்கப்படும் என்றார்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் 54 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளதாகவும், அதில் 37 சதவிகிதம் பெண் ஊழியர்கள் என்றும் குறிப்பிட்டார்.

□□□□□□□□□

கருணாநிதி நினைவுதினம்

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் 6-வது ஆண்டு நினைவுதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் மற்றும் கட்சியினர் அன்னாரது நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தினர்

முன்னதாக அவரது நினைவிடம் வரை நடைபெற்ற அமைதி பேரணியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

□□□□□□□□□

அமைச்சரவை கூட்டம்

சென்னை தலைமைச் செயலகத்தில் வரும் 13-ம் தேதி தமிழ்நாடு அமைச்சரவை கூட்டம் நடைபெறுகிறது

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பருவமழை முன்னேற்பாடுகள், சட்டம் ஒழுங்கு நிலைமை, மாநில அரசின் மக்கள் நலத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படும் என தெரிகிறது.

□□□□□□□□

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று 10 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர்வரத்து குறைந்த நிலையில் உபரிநீர் போக்கி மதகுகளில் தண்ணீர் திறப்பும் நிறுத்தப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் 120 அடியாகும்.

திருச்சி முக்கொம்புவிற்கு வரும் 28 ஆயிரம் கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது

நீர்வரத்து குறைந்ததால் கொள்ளிடம் ஆற்றில் நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தொடர் கனமழை காரணமாக தேனி கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு வனத்துறை தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

சேலம் வாய்ஸ்

சேலம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் அகில இந்திய கைவினைப் பொருட்களின் கண்காட்சியில் மாநிலம் மற்றும் தேசிய அளவில் விருதுபெற்ற பாரம்பரியமிக்க கைவினை கலைஞர்கள் பங்கேற்றுள்ளனர்.

இக்கண்காட்சியின் மூலம் தேசிய அளவிலான சந்தை வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றதாக அறுநூத்து மலைவாழ் மக்கள் உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்பை சார்ந்த விவசாயி திருமதி. செல்வராணி தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

கப்பல் சேவை

நாகை - இலங்கை காங்கேசன் துறை இடையே கப்பல் சேவை விரைவில் துவங்கப்பட உள்ளது.

இதற்கான சோதனை ஓரிரு நாட்களில் நடத்தப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

இருவரி

நீலகிரி முதுமலை புலிகள் காப்பகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் வனவிலங்குகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதால் சுற்றுலா பயணிகள் புகைப்படம் எடுப்பதை தவிர்க்குமாறு வனத்துறை அறிவுறுத்தி உள்ளது.

□□□□□□□□

வானிலை

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகள்,

மத்திய கிழக்கு, வடமேற்கு வங்கக்கடல், தென்மேற்கு அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

□□□□□□□□

கிரிக்கெட்

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3-வது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி கொழும்புவில் இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் இலங்கை 1-0 என்ற கணக்கில் தற்போது முன்னிலையில் உள்ளதால் தொடரை சமன் செய்யும் முனைப்புடன் இந்தியா களமிறங்குகிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.